Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 12, 2022

செவ்வாய்க்கிழமை ஜூலை 12, 2022 | ஒளி: 08 கதிர்: 046 | பக்கம்:08 | நகரப்பதிப்பு FREE

## இன்று துக்க தினம்

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

அவரது திடீர் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இலங்கை அரசாங்கம் தேசிய துக்கதினமாக ஜூலை 12 ஐ (இன்று) பிரகடனப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



### சூடு பிடிக்கிறது ஜனாதிபதி விவகாரம்:

# புதன் போனால் புதனன்று புதியவர்

**15 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்**

**19 ஆம் திகதி இடைக்கால ஜனாதிபதிக்கான வேட்புமனு: 20இல் வாக்கெடுப்பு**

*ஆர்.யசி*

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து மக்களின் அழுத்தங்களின் காரணமாக, ஜனாதிபதி பதவி விலகுவதாக சபாநாயகர் தெரிவித்துள்ள நிலையில், நாளை 13 ஆம் திகதி அவர் பதவி விலகினால் எதிர்வரும் 15 ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டவும், 19 ஆம் திகதி இடைக்கால ஜனாதிபதிக்கான வேட்புமனுவை தாக்கல் செய்து, 20 ஆம் திகதி பாராளுமன்ற வாக்கெடுப்பை நடத்தவும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கோட்டா வெளியே; இல்லை உள்ளே



### மாறிமாறி சொன்னார் மஹிந்த

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறி, அயல்நாடொன்றில் தங்கியிருக்கிறார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பிபிசியிடம் தெரிவித்தார். பிபிசிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் ஒலிக்குறிப்பு, நேற்றையதினம் (11) ஊடகங்களில் வெளியாகியிருந்தது.


தொடர்ச்சி P2

### அழுத்தங்களுக்கும் சவால்களுக்கும் அஞ்சி

## பொறுப்புகளை விட்டு ஓடும் நபர்கள் நாமல்ல

தற்போதைய நெருக்கடி நிலைமையிலும் அதிகாரங்களை எம்மிடம் ஒப்படைத்தால் ஆட்சியை பொறுப்பேற்க நாம் தயாராகவே உள்ளோம். எக்காரணம் கொண்டும் அழுத்தங்களுக்கும், சவால்களுக்கும் அஞ்சி பொறுப்புகளை விட்டு ஓடும் நபர்கள் நாமல்ல. எந்த சந்தர்ப்பத்திலும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### இலங்கையின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையானது

## ஐ.எம்.எப் பேச்சை தாமதமாக்கும்



நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்திருந்தாலும், இலங்கையின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையானது சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை தாமதப்படுத்தலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஏழைகளின் அழுகையை புறக்கணிக்க வேண்டாம்



இலங்கையில் ஏழைகளின் அழுகையைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அதிகாரத்தில் உள்ளவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் கொந்தளிப்பின் காரணமாக பதட்டமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### தாக்குதல்கள் குறித்து

## உரிய விசாரணைகள் அவசியம்

அமைதியாக போராடிய போராட்டக்காரர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராக இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2



## நான்கு ஆண்டுகள் தேவை

### முதல் வருடம் மிக மோசமானது என்கிறார் பிரதமர்

பொருளாதாரம் சீர்குலைந்த காரணத்தால் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நான்கு ஆண்டுகள் தேவைப்படும் எனவும் முதல் வருடம் மிக மோசமானது என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## எமக்கான அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்

### இதனை தாண்டிய எந்தவொரு தீர்வும் இல்லை



ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மக்கள் ஆணை முடிவுக்கு வந்துள்ளது. இவர்கள் ஒன்றிணைந்து எமது அழகான தாய்நாட்டை நாசமாக்கிவிட்டனர். ஜனாதிபதியும் பிரதமரும் ஜனநாயகத்தை முற்றுமுழுதாக இழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இந்தியாவின் நிலைப்பாடு இதுவல்ல

### இந்திய உயர் ஸ்தானிகராலயம்

இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்புவதாக ஊகங்களின் அடிப்படையில் பல்வேறு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருக்கும் செய்திகளை உயர் ஸ்தானிகராலயம் முற்றுமுழுதாக நிராகரிப்பதாக தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எதிர்க்கட்சிகள் கிடுக்குப்பிடி; ரணிலோ விடாப்பிடி

*ஆர்.யசி*

நாட்டில் உருவாகியுள்ள மக்கள் எதிர்ப்புப் போராட்டமானது வெறுமனே ஜனாதிபதியை வெளியேற்ற வேண்டும் என்பது மட்டுமல்ல, பிரதமரும் அரசாங்கமும், முழுமையாக பதவி விலக வேண்டும் என்பதாகும். ஆகவே, பிரதமர் உடனடியாக பதவியை இராஜினாமா செய்யவேண்டுமென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. எனினும் எவரது கருத்துகளுக்கு பதில் தெரிவிக்காது,

தொடர்ச்சி P2

### போராட்டத்துக்கு ஆதரவளித்த

## பொலிஸ் அதிகாரி ஆயுதத்துடன் கைது

ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று கோரி சனிக்கிழமை (09) நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய பொலிஸ் அதிகாரி, கொழும்பு, கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் நேற்று (11) அதிகாலை கூரிய ஆயுதத்துடன் நுழைந்த போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹைலெவல் வீதியால் வந்து கொண்டிருந்த போராட்டக்காரர்களுக்கு மஹரகம நகரில் வைத்து,

தொடர்ச்சி P2

## புஸ்ஸல்லாவை விபத்தில் இருவர் பலி: ஆத்திரத்தில் பஸ்ஸையும் எரித்தனர்

*எஸ். யோகா*



புரட்டொப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரட்டாசி பகுதியில் இருந்து புஸ்ஸல்லாவை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸொன்று நேற்று (11) காலை விபத்துக்கு உள்ளானது.

பஸ்ஸில் அதிகளவான மக்கள் பயணித்து கொண்டிருந்தனர். பஸ்ஸின் முன் சில்லுகளில் ஒன்று திடீரென பழுதடைந்து. அதனையடுத்து, பஸ்ஸை மண்வங்கியில் இடித்து சாரதி நிறுத்தினார்.

இதன்போது, பஸ்ஸின் பின் கதவுக்கு வெளியே நின்றிருந்தவாறு பயணித்தவர்களில் இருவரே சம்பவ இடத்திலேயே பலியானார்கள். பெரட்டாசி தோட்டத்தை சேர்ந்தவர்களான சுரன்ஜின் புஸ்பகுமார் (வயது 39),

தொடர்ச்சி P2

# குழந்தைப் பருவ வளர்ச்சியில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும்



**ஐந்து வயதுக்கு கூடியவர்களின் காப்புறுதி, பாதுகாப்பு, கல்வி கவனத்தில் கொள்ளப்படும்**

**ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட பெண்கள் வெளிநாடு செல்ல அனுமதி இல்லை**

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட தாய்மார் வீட்டு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதி வழங்குவது அந்தக் குழந்தைகளின் குழந்தைப் பருவ வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆண் - பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு தெரிவித்துள்ளது.

வீட்டு வேலைகளுக்காக (பயிற்றப்படாத தொழில்) பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, பிரதேச செயலகங்களில் விசாரணைகள் நடத்தப்பட்டு குடும்பப் பின்னணி அறிக்கை வழங்கப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டே வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட பெண்கள் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன், ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் காணப்பட்டால் அவர்களின் காப்புறுதி, பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

எனினும், வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்லும் தாய்மார்களின் பிள்ளைகளின் குறைந்தபட்ச வயதை 02 ஆக குறைப்பதற்கும், இதுவரை அத்தியாவசியமாக இருந்த குடும்ப பின்னணி

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதன் போனால் புதனன்று புதியவர்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று கூடிய விசேட கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி ஏன் நேரடியாக தனது தீர்மானத்தை அறிவிக்காத்துள்ளார்? சபாநாயகருக்கு அறிவித்து திருட்டுத்தனமாக செயற்பட வேண்டிய அவசியம் என்ன எனவும் கட்சி தலைவர்களை கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர். சபாநாயகர் மூலமாகவோ அல்லது பிரதமர் மூலமாகவோ இவ்வாறு அறிவிப்புகளை விடுப்பது ஏமாற்று வேலை எனவும், இறுதி நேரத்திலும் ஏதேனும் சூழ்ச்சிகளை செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் உள்ளதாகவும் ஜே.வி.பி, கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

## இன்று துக்க தினம்

ஆகையால் இன்று (12), சகல அரச நிறுவனங்களிலும் தேசிய கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றிவைக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இன்று (12) விடுமுறை நாள் அல்ல என்றும் அறிவித்துள்ளது,

## கோட்டா வெளியே...

அதற்கமைய, பிபிசியின் ஊடகவியலாளருக்கு மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புதன்கிழமைக்குள் நாடு திரும்புவார் என்றும் 13ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்வதாக தனக்கு அறிவித்துள்ளார் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டிலேயே இன்னும் இருக்கின்றார். பிபிசிக்கான நேர்காணலின் போது நான் தவறு செய்துவிட்டேன் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இந்திய செய்தி சேவையான ஏஎன்ஐக்கு, தொலைப்பேசி ஊடாக வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

## ஏழைகளின் அழுகையைப்...

இதனை அடுத்த சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், அமைப்புகள் என பல்வேறு தரப்பினர் இலங்கை குறித்து தமது கவனத்தை திரும்பியுள்ள நிலையில் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதானது.

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் இலங்கை மக்களின் துக்கத்தில் என்னை இணைத்துக் கொள்கிறேன். நாட்டின் ஆயர்களுடன் சேர்ந்து, அமைதிக்கான எனது வேண்டுகோளை புதுப்பிக்கிறேன், ஏழைகளின் அழுகையைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அதிகாரம் உள்ளவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் எனக் கூறியுள்ளார்.

## உரிய விசாரணைகள்...

ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை தமது தலைவர்களிடம் இருந்து கோரும் இலங்கை மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஆதரவளிக்க, தொடர்புடைய அனைத்து தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடனும் உரையாடலைத் தொடரக்கூடிய சட்டபூர்வமான அரசாங்கத்திற்கு சுமூகமான மாற்றத்திற்கான தேவை உள்ளது.

உணவுப் பாதுகாப்பு, விவசாயம், வாழ்வாதாரம் மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆரோக்கியம் கிடைப்பதற்கு முன்னுரிமை அளித்து, மேலும் துன்பத்தைத் தவிர்க்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ள அவர்,

ஐ.நா. தொடர்ந்து நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், தேவைக்கேற்ப உரையாடலில் உதவத் தயாராக உள்ளது. உலகெங்கிலும் நாம் செய்வது போல், இலங்கையில் மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொறுப்புகளை விட்டு...

இப்போது எமது தரப்பில் மூவரே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம். ஜனாதிபதியின் சட்டங்கள், பிரதமரின் சட்டங்கள் ஆகியன பாராளுமன்றத்தில் இருக்கும் என்றால் எந்த நேரத்திலும் அதனை தவறாக பயன்படுத்த முடியும். ஆனால் அவ்வாறான நெருக்கடிக்கு மத்தியிலும் எமக்கான குழுவொன்றை உருவாக்கிக்கொள்ளும் அனுமதியை வழங்கினால் நாம் பொறுப்பேற்க தயார் எனவும் கூறியுள்ளார்.

ஜனநாயக ரீதியில் மக்கள் தெரிவுசெய்து அனுப்பிய பிரதிநிதிகளை கொண்டே பாராளுமன்றமே இயங்கிக்கொண்டுள்ளது. ஆனால் இன்று பாராளுமன்றத்திற்கும் மக்கள் ஆணைக்கும் இடையில் பரஸ்பர முரண்பாடுகள் எழுந்துள்ளன. ஆகவே மக்களின் ஆணையை பெற்றுக்கொண்ட புதிய பாராளுமன்றம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயகத்தின் அடையாளமாகும். அதேபோல் மக்கள் எழுச்சிக்கு தலைமை தாங்கிய பலர் உள்ளனர். அவர்களை இணைத்துக்கொண்டும் பயணிக்க முடியும். ஆகவே இப்போதுள்ள பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும். அதற்கு காலம் தேவை என்றால் அதனையும் கருத்தில் கொண்டு அதுவரை பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக உள்ளோம். சூழ்ச்சிகளின் மூலமாகவும், டீல்கள் மூலமாகவும் நாட்டின் ஜனாதிபதி, பிரதமரை நியமிக்க இடமளிக்க முடியாது. இது மக்களின் ஆணையின் மூலமாக தெரிவாக வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

## ஐ.எம்.எப் பேச்சை தாமதமாக்கும்

தொழில்நுட்ப அளவில் சர்வதேச நாணயநிதியத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ள போதிலும், கொள்கையளவில் ஸ்திரமான நிர்வாகத்திடமிருந்தும் அதிகளவான அர்ப்பணிப்பு அவசியம் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். மேலும், சர்வதேச நாணயநிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளிலும், எரிபொருள் எரிவாயு போன்றவற்றின் தட்டுப்பாடுகளிற்கு தீர்வை காண்பதிலும் முன்னேற்றத்தை காண்பதற்கு கூடிய விரைவில் ஸ்திரமான நிர்வாகமொன்று அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவிடமிருந்து இலங்கை 400 மில்லியனை அமெரிக்க டோல்; டொலர்களை பெற்றுக்கொண்டது அதன் பின்னர் இரு கடனுதவிகளாக 1.5 பில்லியன் டொலர்களை பெற்றுள்ளோம். இந்நிலையில் இந்தியாவின் ரிசேர்வ் வங்கியுடன் ஒரு மில்லியன் டொலர் நாணய இடமாற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் எரிபொருள் இறக்குமதிக்கா மேலதிகமாக 500 மில்லியனை பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை இந்தியாவுடன் ஆரம்பித்துள்ளோம் எனவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## எமக்கான அரசாங்கத்தை...

ஆகவே நாட்டின் இஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு தலைமைத்துவத்தை பெற்றுக்கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (11) விடுத்துள்ள விசேட அறிவிப்பில் இதனை அவர் தெரிவித்துள்ளார். அவர் இதன்போது மேலும் கூறியுள்ளதானது,

எமக்கான ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்கி நாட்டை மீட்டெடுப்பதே எமது வேலைத்திட்டமாகும். இதனை தாண்டிய எந்தவொரு தீர்வும் இல்லை. இதனை எதிர்த்து, பாராளுமன்றத்திற்குள் இருந்துகொண்டு குழப்பியடிக்க எவரேனும் செயற்படுவார்கள் என்றால் அது தேசத்துரோக செயற்பாடாகும். ஆகவே நாட்டை மீட்டெடுத்து நெருக்கடியில் இருந்து விடுவிக்க நாம் தயார் என தெரிவித்துள்ளார்.

## 4 வருடங்கள்...

நேற்றையதினம் (11) அவர் வெளியிட்ட சிறப்பு வீடியோவிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

9ஆம் திகதி நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் வீடு செல்லும் போராட்டக்காரர்கள் தனது வீட்டை தாண்டிச் செல்லுகையில் அமைதியின்மை ஏற்படக்கூடும் என்பதால் வீட்டை விட்டு வெளியேறுமாறு பொலிஸார் கூறியதாகவும் அதன் பின்னர் தானும் மனைவியும் வீட்டை விட்டு வெளியேறியதாக பிரதமர் தெரிவித்தார். தமக்கென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்த ஒரே வீடு இன்று தீக்கிரையாக்கப்பட்டு உள்ளதாகவும் இதில் அதிகமாக அழிந்துபோன சொத்துக்கள் தமது புத்தகங்களாகும் என்றும் அதில் வரையறுக்கப்பட்ட பதிப்பு மற்றும் அரிய புத்தகங்கள் இருந்தன என்றும் குறிப்பிட்டார்.

போர்த்துகேயர் காலம் மற்றும் ஒல்லாந்து கால புத்தகங்கள் உட்பட்ட 2500 புத்தகங்கள் அதில் இருந்தாகவும் அவற்றை பேராதனைப் பல்கலைக்கழகம், ரோயல் கல்லூரி மற்றும் பல இடங்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு தானும் தனது மனைவியும் தீர்மானித்திருந்ததாக தெரிவித்தார்.

அதனை விட பழங்காலத்து சித்திரங்களும் இருந்தாகவும் குறிப்பிட்ட அவர், விமலதர்மசூரிய மன்னன் ஒல்லாந்து தூதுவரை சந்தித்த 200 வருட பழமைவாய்ந்த ஒல்லாந்து சித்திரமும் இருந்ததாகவும் ஒரேயொரு சித்திரம் எஞ்சியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதிய கலந்துரையாடல்களுக்கு இந்த இரண்டு வாரங்கள் என்றும் எரிபொருள் மற்றும் உணவு கொள்வனவுக்கு இது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் சட்டத்துக்கு கட்டுப்பட்டு அரசியலமைப்பின் விதிகளின்படி செயல்பட வேண்டும் என்றும் அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்கும், அதன் மூலம் மக்களின் துயரங்களைக் கேட்பதற்குமான பிரதமர் தான் என்றும் குறிப்பிட்டார்.

சனிக்கிழமை (09) இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் உடன்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அன்றைய தினம் மாலை டுவீட் பதவிட்டிருந்ததாகவும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, ஏன் பிரதமர் இராஜினாமா செய்ய விரும்பவில்லை என கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த அவர், புதிய அரசாங்கத்தை அமைத்ததன் பின்னர் பதவி விலக தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

## புஸ்ஸல்லாவை விபத்தில் இருவர் பலி: ஆத்திரத்தில் பஸ்ஸையும் எரித்தனர்

விஜயகுமார் (வயது 26) ஆகிய இருவரே மரணமடைந்தனர்.

அத்துடன், காயமடைந்த 10 பேர், வகுப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். குறித்த பஸ்ஸில் 70 பேர் பயணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபரீதத்தை அடுத்து அந்த பஸ்ஸின் சாரதி தப்பியோடிவிட்டார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தையடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பஸ்ஸை எரித்துள்ளனர். குறித்த வீதியில் பயணிகள் போக்குவரத்தில் இரண்டு பஸ்களே சேவையில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புரட்டொப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்தியாவின்...

இச்செய்திகளும் இவ்வாறான நோக்குகளும் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை அல்ல எனவும் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

ஜனநாயக பெறுமானங்கள் மற்றும் விழுமியங்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசியலமைப்பு ரீதியான கட்டமைப்பு ஆகியவற்றின் ஊடாக செழுமை மற்றும் முன்னேற்றத்தினை நனவாக்க விரும்பும் இலங்கை மக்களுடன் இந்தியா துணை நிற்பதாக இந்திய வெளியுறவு அமைச்சின் ஊடகப்பேச்சாளர்

நேற்றையதினம் மிகவும் தெளிவாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் உயர் ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது,இந்திய உயர் ஸ்தானிகராலயம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளனர்.

## எதிர்க்கட்சிகள் கிடுக்குப்பிடி: ரணிலோ...

செவிசாய்த்துக்குக் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உங்களால்தான் எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்றாராம்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் விசேட கட்சி தலைவர்கள் கூட்டம் நேற்று (11) கூடியது. அக்கூட்டத்தில் நாட்டின் நெருக்கடி நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மற்றும் மக்களின் ஆணையை கருத்தில் கொள்ளாது எவரதும் கருத்துக்கும் செவி மடுக்காத நிலைப்பாடுகளில் விளைவாகவே நாடு இன்றைய பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

நாட்டு மக்களின் போராட்டங்களும், கோஷங்களும் வெறுமனே ஜனாதிபதியை வெளியேற்றுவது மட்டுமல்ல, பிரதமரும் வெளியேற வேண்டும் மற்றும் அரசாங்கம் வெளியேற வேண்டும் என்பதையும் வலியுறுத்தியதாக அமைந்துள்ளது. ஆகவே, மக்களின் கோரிக்கைக்கு செவி மடுக்க வேண்டும். அத்துடன் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை உருவாக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

மக்களின் ஆணையை பெற்ற ஜனாதிபதிக்கு மக்கள் ஆதரவு இன்று இல்லாது போயுள்ளது, மக்களின் ஆணையை பெறாத பிரதமர் அதற்குரிய ஆசனத்தில் அமர தகுதியில்லாதவர், ஆகவே பிரதமர் உடனடியாக பதவி விளக்க வேண்டும் எனவும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், இந்த விடயங்களை சிறிதும் கருத்தில் கொள்ளாத வகையில் பிரதமர் செயற்பட்டதாகவும், இவ்வாறான கருத்துக்களை வெளிப்படையாக கூறியமையே எனது வீட்டை தீ வைக்கும் அளவிற்கு சென்றது எனவும் ஹக்கீம் எம். பியிடத்தில் பிரதமர் சீறிப்பாய்ந்தாராம்.

இதனிடையே, எரிபொருள் கொள்வனவு குறித்து கட்சித் தலைவர்களின் அனுமதி வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்தச் சந்திப்பின் போது பிரதமர் முன்வைத்துள்ளார். அதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். அமைச்சரவை எடுக்க வேண்டிய தீர்மானங்களை எம்மீது சுமத்த வேண்டாம். அதுமட்டுமல்ல இந்தக் கூட்டம் எரிபொருள் கொள்வனவுக்காக கூடியதல்ல என அனுரகுமார, சுமந்திரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

## பொலிஸ் அதிகாரி...

தனது தலைக்கவசத்தை கழற்றி வீசி குறித்த அதிகாரி ஆதரவு தெரிவித்திருந்தார்.

ஹோமாகம, மாகமனையில் உள்ள பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் அவர் கடமையாற்றியதாக பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்தார். பொலிஸ் சீருடையுடன் செருப்பு அணிந்திருந்த குறித்த நபர் மீது இராணுவ அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, அவரிடம் நடத்திய சோதனையில் கூரிய ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டதாக பேச்சாளர் தெரிவித்தார். அவரிடமிருந்து 10 அங்குல நீளமும் 2 அங்குல அகலமும் கொண்ட ஆயுதம் கைப்பற்றப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்காக கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைப் பருவ வளர்ச்சியில்...

அறிக்கை சமர்ப்பிப்பதை இனி கட்டாயமாக்காமலிருப்பதற்கும் ஜூன் 27 ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண் பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஆகியன அண்மையில் ஒன்றுகூடி இது தொடர்பில்ன் நீண்டநேரம் ஆராய்ந்திருந்தன.

இதற்கமைய, ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட இலங்கைத் தாய்மார்களை வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்கல் மற்றும் வெளிநாடு செல்லும் தாய்மார்கள் குடும்பப் பின்னணி அறிக்கையை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்காமல் இருத்தல் குறித்த அமைச்சரவைத் தீர்மானங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனக் குறித்த குழுவின் தலைவி பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குழந்தைகளின் ஆரம்பப் பருவ வளர்ச்சியில் தாய் முக்கிய பங்காற்றுவதுடன், இதனால் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் உள மற்றும் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் இத்தீர்மானம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

சுமந்திரன் பிரதமரானால் மகிழ்ச்சியே

# தமிழ் கட்சிகளின் ஏகோபித்த ஆதரவை பெற்றுக் கொள்ளவேண்டும்

சுமந்திரனை பிரதமராக்க அழைக்கின்றனர் என்றால் உண்மையிலேயே நான் சந்தோஷம் அடைவேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வாராயின்,



அதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தினதும் ஏகோபித்த ஆதரவை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டில் தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவார். அவரால் அது முடியாதுபோனால், சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். ஆகவே ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் இந்த மூன்று பேருக்கு மட்டுமே உள்ளது. புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்போகின்றோம் என மக்கள் முன்வந்தால் அதனால் எந்தப் பயனும் கிடையாது. எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கம் அமைப்பது என்பதை விட, எங்களிடம் என்ன கொள்கைகள் எவ்வாறான விடயங்களை முன்வைத்து நாம் அரசாங்கத்தை அமைக்க போகின்றோம் என்பதே முக்கியம்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனை பிரதமராக நியமிக்கலாம் என்று அணுகிய நிலையில், அதை எல்லாக் கட்சிகளும் இணைந்து அழைத்தால் தான் அந்தப் பதவியை ஏற்க முடியும் என சுமந்திரன் தெரிவித்துள்ளார் என எனக்கு அறியக்கிடைத்தது.

சுமந்திரனை பிரதமராக்க அழைக்கின்றனர் என்றால் உண்மையிலேயே நான் சந்தோஷம் அடைவேன். ஆனால், சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும்.

அவர் தன்னுடைய கட்சியினுடைய ஏகோபித்த விருப்பிலா அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பிலா இந்தப் பதவியை ஏற்றுக்கொள்வார் என்பதே கேள்வியாகவும். அத்தோடு, தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பின்னர் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தால், தாங்கள் என்ன காரணத்துக்காக பாராளுமன்றுக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும். சுமந்திரன் இவ்வாறு பதவி ஏற்றுக்கொள்வதானால் தமிழ் கட்சிகள் அனைத்தினதும் ஏகோபித்த விருப்பை பெற்றுக்கொண்டால் நல்லது என நினைக்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

# மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பயணம் தொடரும்

## அமைச்சர் டக்ளஸ்



மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆணையினை எமக்கான பலமாகக் கொண்டு, தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக தென்னிலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி, எமது மக்களின் எதிர்பார்ப்புகளையும் அரசியல் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதே எமது வழிமுறையாக இருக்கின்றது. எனவே, தென்னிலங்கையில் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்களும் அரசியல் மாற்றங்களும், எமது மக்கள் நலச் செயற்பாடுகளில் எந்தவிதமான மாற்றத்தினையும் ஏற்படுத்தாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதற்கமைய தமது பயணமும் மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னகர்ந்து கொண்டே இருக்கும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான உத்தியோகத்தர்களுக்கான விசேட ரயில் சேவை நேற்று (11) ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான அரசாங்க உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களின் கோரிக்கைக்கமைய கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. குறித்த கோரிக்கை, சம்மந்தப்பட்ட தரப்புக்களால் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அதனை துறைசார்ந்த அமைச்சருடன் கலந்துரையாடி, இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தேன்.

கிளிநொச்சி, யாழ்ப்பாண நிர்வாக மாவட்டங்களை சேர்ந்த பொது மக்களுக்கும் இந்தச் சேவை மிகவும் வரப்பிரசாதமாகும். இச் சேவையினை வவுனியா வரையில் விஸ்தரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு தரப்பினரும் முன்வைத்து வருகின்றனர். அதுதொடர்பாக ஆராய்ந்து, சாத்தியமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

தற்போது ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது போன்று, விரைவில் தமிழகத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்கு கப்பல் சேவையும், பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கான விமான சேவையும் இடம்பெறும் எனவும் அமைச்சர் டக்ளஸ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கடல் வளத்தை விற்க அனுமதிக்க மாட்டோம்



எஸ்.றொசேரியன் லெம்பேட்

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி, எமது கரையோரங்களில் உள்ள வளங்களை இந்திய மீனவர்கள் சூறையாடிச் செல்வதாக, மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏற்கெனவே தாம் முறையிட்டும் தான்தோன்றித்தனமாக செயல்பாட்டு, நீண்ட காலமான தமது கோரிக்கையை யாரும் செவிமடுப்பதாக தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “நாங்கள் இன்றைய தினம் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன் வைக்கின்றோம். தயவுசெய்து எமது வளங்களை எமது மக்களுக்காக விட்டு வையுங்கள்.

“எமது வளங்களை நீங்கள் அள்ளிச் செல்வதால் எமது மக்கள் மீண்டும் மீண்டும் பட்டினி சாவை எதிர்கொள்கிறார்கள்.

“வட பகுதியில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எரிபொருள் அற்ற நிலையில் மாதக் கணக்காக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதனால் கடலில் போடப்பட்டுள்ள அவர்களுடைய வலைகளை கூட கரைக்கு கொண்டு வர முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

“மேலும், வடக்கின் பல பகுதிகள் அந்நிய தேசத்தவர்களுக்கு விற்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அவை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். மீனவ சமுதாயத்தின் மீன்பிடி பிரச்சினை தொடர்பான சம்பவங்களை கையாளும் போது, அவர்களின் ஆலோசனைகளை கேட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

“எதிர்காலத்தில் இங்கு உள்ள அரசியல் தலைமைத்துவங்கள் இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை அந்நிய நாட்டுக்கு விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்” என்றார்.

# எரிபொருள் கப்பல்கள் இந்தவாரம் வரவுள்ளன



இந்த வாரத்தில், மூன்று எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (11) தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று (12) முதல் 15ஆம் திகதிக்கு இடையில் டீசல் கப்பலும், இம்மாதம் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதிக்கு இடையில் கனரக எண்ணெய்க் கப்பலும், இம்மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிக்கு இடையில் மசகு எண்ணெய்க் கப்பலும் வந்து சேரும் என்றார். தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவின் மூலமே இவ்விடயத்தை அவர் அறிவித்திருந்தார். இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சின் உதவியுடன் லங்கா ஐ.ஓ.சி.க்கு வெள்ளிக்கிழமை (08) முழுமையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, ஜூலை 15, 17 க்கு இடையில் டீசல் தொகுதியும் ஜூலை 22, 24 க்கு இடையில் பெற்றோல் தொகுதியும் நாட்டை வந்தடையும்.

மேலும், 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிக்கு இடையில் வரவுள்ள டீசலுக்கும் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதிக்குள் வருகைதரவுள்ள பெற்றோலுக்கும் கடந்த வாரம் முன்பணம் செலுத்தப்பட்டதாகவும் டீசலுக்கான மிகுதித் தொகை நேற்று (11) வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஜூலை 9 ஆம் திகதி வருகைதர இருந்த டீசல் தொகுதி சீரற்ற வானிலை காரணமாக தாமதமானதாகவும் குறிப்பிட்ட அவர், நேற்று (11) காலை இந்தியாவிலிருந்து எரிபொருள் புறப்படுவது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் ஜூலை 12 முதல் 15ஆம் திகதிக்குள் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்றும் குறிப்பிட்டார்.

# மயக்கம் தெளியாத வஜிர அபேவர்தன

ஹஸ்பர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவது அரசியல் யாப்பிற்கு முரணானது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுப் செயலாளர் வஜிர அபேவர்தன கூறியிருப்பதானது, அவருக்கு இன்னும் மயக்கம் தெளிய வில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று (11) அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இரண்டு மாதங்களையும் தாண்டிச் செல்லுகின்ற தன்னெழுச்சி போராட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் இருவரையும் பதவி விலகிச் செல்லுமாறு மக்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகையை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ள போராட்டக்காரர்கள், அவ்விருவரும் பதவி விலகாத வரை இங்கிருந்து வெளியேற மாட்டோம் என உறுதிபட கூறுகிறார்கள்.

இவ்வாறு தற்போது என்ன நடந்து கொண்டு இருக்கின்றன என்று கூட அறியாது, பிரதமர் பதவி விலகுவது அரசியல் யாப்பிற்கு முரணானது என ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் வஜிர அபேவர்த்தன கூறுவது, அவர் இன்னும் மயக்கம் தெளியாமல் இருக்கின்றார் என்பதை உறுதிப்படு த்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.





# மாற்றத்துடன்..

எரிபொருள் நெருக்கடி காரணமாக பல்வேறு தரப்பினரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், தமது கடமையை செய்வதற்கு சைக்கிளில் சென்று மக்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டு, அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கின்றனர்.

(படம்: பாறுக் ஷிஹான்)

யாழ். போதனா வைத்தியசாலையின்

# பணிப்பாளராக மீண்டும் சத்தியமூர்த்தி



வைத்திய நிர்வாக மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ள வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, இம்மாத முடிவில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக மீண்டும் கடமையேற்கிறார்.

தற்போது பதில் பணிப்பாளராகக் கடமையாற்றும் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன், மீண்டும் மாகாண சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளராகக் கடமையைத் தொடரவுள்ளார்.

லண்டன் சென்றுள்ள வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, 2015 ஆம் ஆண்டு ஒக்டோர் மாதம் முதல் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையாற்றி வருவதுடன், சுகாதார அமைச்சினால் மருத்துவமனைக்கான நிரந்தரப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது ஒருவருட கால வெளிநாட்டு மேற்படிப்புக் காலப்பகுதியில் நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரமாகியிருந்தது.

இந்நிலையில், அவர் நாடு திரும்பி, யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையைப் பொறுப்பேற்று அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் இடர்கால முகாமைத்துவத்தை சிறந்த முறையில் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு செல்லும் சிங்கப்பூர் பிரஜைகள்

# கட்டாயமாக காப்புறுதி செய்யவேண்டும்

## சிங்கப்பூர் அரசாங்கம் அறிவிப்பு

இலங்கையில் தங்கியிருக்கும் சிங்கப்பூர் பிரஜைகள் தங்களது பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும், அவதானமாக இருக்க வேண்டுமெனவும் சிங்கப்பூர் அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் அதிகமாக கூடும் இடங்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

செய்திகளை உன்னிப்பாக கேட்டு உள்நாட்டு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கைக்கு பயணம் செய்யும் சிங்கப்பூர் பிரஜைகள் கட்டாயமாக முழு அளவில் காப்புறுதி செய்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

சிறப்பு அதிரடிப்படையின் அத்தியட்சகர்

# ரொமேஷ் லியனகே பணியிடை நீக்கம்

கடந்த ஒன்பதாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு வெளியே ஏற்பட்ட அமைதியின்மையின் போது ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் தாக்குதலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் சிறப்பு அதிரடிப்படையின் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்காக பொதுச் சேவை ஆணைக்குழு அங்கிகாரத்தின் கீழ் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் காவல்துறை அதிபர், லியனகேவை பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

சனிக்கிழமையன்று பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு வெளியே பணியில் இருந்த காவல்துறை மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் ஏழு ஊடகவியலாளர்கள் காயமடைந்ததுடன், நூறுக்கும் அதிகமான பொதுமக்களும் தாக்கப்பட்டு காயமடைந்தனர். இந்நிலையில் பொலிஸ் ஊடக பிரிவு அனுப்பியுள்ள அறிவிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக

# படகில் பயணித்த 77 பேர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, களுவங்கேணி கடற்கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு இயந்திர படகில் சட்டவிரோதமாக பயணித்த 77 பேரை நேற்று (11) அதிகாலை கைது செய்துள்ளதாகவும், இதில் பெண் ஒருவர் உட்பட 17 பேரை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், ஏனைய 60 பேரை படகுடன் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவதினமான நேற்று அதிகாலை 2 மணியளவில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடல்பகுதியில் இயந்திரப்படகில் பயணித்த 77 பேரை கடற்படையின் படகுகள் சுற்றிவளைத்தது.

இதில் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் 60 பேரை கைது செய்ததுடன், குறித்த சட்டவிரோத படகில் ஏறுவதற்கு களுவங்கேணி கடற்கரையில் வான் ஒன்றில் காத்திருந்த 17 பேரையும், கடற்படை புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைத்து கைது செய்தனர்.



இதில் கைது செய்யப்பட்ட 60 பேரையும் மற்றும் படகையும் திருகோணமலை கடற்படை முகாமிற்கு இழுத்துச் சென்றுள்ளதுடன், களுவங்கேணி கடற்கரையில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 17 பேரையும் 14 அரை இலட்சம் ரூபாயையும், வான் ஒன்றையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன், இதில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்வர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆரையம்பதியில் கைக்குண்டு மீட்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி, மாவிலங்கத்துறையில் நேற்று (11) காலை கைக்குண்டு மீட்கப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாடு மேய்ப்பதற்காக சென்ற ஒருவர் வயல் காணியில் கைக்குண்டு கிடப்பதைக் கண்டுள்ளார். இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த இடத்துக்கு சென்ற காத்தான்குடி பொலிஸார், கைக்குண்டை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ள காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வீடொன்றில் இருந்த நபரொருவர் நேற்று (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, மீராவோடை ஹமீட் சேர்மன் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வயர் ஒன்றினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் 55 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தினர் நேற்று முன்தினம் (10) வெளியூர் பயணம் சென்ற நிலையில், வீட்டில் தனிமையில் இருந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக கண்டனம்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

இலங்கையில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைக்கு எதிராக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா, நேற்று (11) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 09ஆம் திகதியன்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக வாஸஸ்தலம் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்ட சந்தர்ப்பத்தில், மக்களுக்கு தகவல்களை வெளிக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஊடகவியலாளர்களால் எடுக்கப்பட்ட முயற்சி பொலிஸாராலும் விசேட அதிரடிப் படையினராலும் தடுக்கப்பட்டு, அவர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவை ஊடக சுதந்திரத்துக்கு விடப்பட்ட அச்சுறுத்தல் மட்டுமல்ல, ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மனித உரிமை மீறலாகவும் நாம் காண்கின்றோம்.




மக்களின் தகவல் அறியும் உரிமைகளைக் கேள்விக் குறியாக்கும் நோக்குடன் சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட இதுபோன்ற மிலேச்சத்தனமான அடக்குமுறையை ஒரு சுயாதீன ஆசிரியர் சங்கம் என்ற வகையில், கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி

# உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் தொரடந்தும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை தெரிவித்துள்ளது.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி



உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (11) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்காததால் சமுர்த்தி வங்கிகளில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. அத்துடன் சமுர்த்தி மகாசங்கத்தின் வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

மேலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாததால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விஷேட கொடுப்பனவு வழங்குவதிலும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே

# 'யாழ்ராணி'

## விசேட ரயில் சேவை ஆரம்பம்

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே 'யாழ்ராணி' என்ற விசேட ரயில் சேவை, நேற்று (11) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள், அறிவியல் நகர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 90 ரூபாயும் யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாயும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாயும் அறவிடப்படும்.




# சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் வருடாந்தம் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஏழாவது மாநாடு, எதிர்வரும் 14ஆம் திகதி, வியாழக்கிழமை முற்பகல் 09 மணிமுதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின்கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

'புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல்' (Transforming Business for Resilience in New Normal) என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைதலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள், கற்றல் கலாசாரம் மற்றும் சமூகம்




ஆகிய 07 உப பிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

இவற்றுடன், மாணவர்களின் அறிவு மற்றும் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் ஆய்வு மாநாடும் (Student Research Symposium) ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

அதற்காக 6 ஆய்வு கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மாநாட்டு நிகழ்வுகளையும், ஆய்வுச் சமர்ப்பணங்களையும் http://www.iccm.maco.jfn.ac.lk என்ற இணையத் தளத்தினூடாக நேரலையாகப் பார்வையிட முடியும்.

எரிபொருள் நெருக்கடி

# அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு

## அவசர கடிதம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

எரிபொருளின்றி பூநகரி பிரதேச சபையின் அத்தியாவசியமான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருக்கு, பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன், அவசர கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பூநகரி பிரதேசத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பூநகரி, முழங்காவில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாக சபைக்கு தேவையான எரிபொருட்கள் நுகரப்பட்டு வந்துள்ளன.

எனினும், கடந்த இரு வார காலமாக எமக்குரிய எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. எமது சபையின் வாகனங்களில் இருந்த எரிபொருள் நுகரப்பட்டு இன்றுவரை மட்டுப்படுத்தப்பட்ட சேவையை செய்து வந்துள்ளோம்.

இன்றிலிருந்து அனைத்து சேவைகளும் நிறுத்தப்படும் நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களின் அன்றாட குடிநீர் விநியோகம், கழிவகற்றல் செயற்பாடுகள் நிறைவேற்ற முடியாத நிலைமைகள் எழுந்துள்ளன.

இவ்வாறான நிலைமைகளை தெளிவுபடுத்தி பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் இன்றுவரை பதிலேதும் கிடைக்கவில்லை.

எமது பிரதேச சபையின் செயற்பாடுகள்



> **"இன்றிலிருந்து அனைத்து சேவைகளும் நிறுத்தப்படும் நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதனால் குடிநீர் விநியோகம், கழிவகற்றல் செயற்பாடுகள் நிறைவேற்ற முடியாத நிலைமைகள் எழுந்துள்ளன. நிலைமைகளை தெளிவுபடுத்தி பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் பதிலேதும் கிடைக்கவில்லை**

எரிபொருளின்றி முடக்கப்படுமாயின் கழிவுகளால் ஏற்படும் நோய்த் தொற்றுகள் அதன்பால் ஏற்படும் விளைவுகளுக்கு சபையால் பொறுப்பளிக்க முடியாத நிலைமைகள், எமது சக்திக்குட்பட்டதாக அமைந்திருக்கவில்லை என்பதை தங்களுக்கு அறியத்தருவதில் நான் மனவருத்தம் அடைகின்றேன்.

மக்களுக்கான சேவையை இடையறாது வழங்குவதற்கு எரிபொருளை தாங்கிகளில் சேகரித்து, நாளாந்த சேவைக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் ஏற்பாடுகளை செய்து தருமாறு கோருகின்றேன் எனத் தவிசாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகதிகளாக பயணித்தோர்

# பலமணி நேரம் மணல்திட்டில் தவித்தனர்

■ லெம்பர்ட்

இலங்கையில் இருந்து படகுமூலம் அகதிகளாக பயணித்தவர்கள், தனுஷ்கோடி மணல்திட்டில் பல மணிநேரம் உணவின்றி குழந்தைகளுடன் தவித்தவர்களை, ரோந்து கப்பல் உதவியுடன் பத்திரமாக மீட்ட மரைன் பொலிஸார், அவர்களை அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்துச் சென்று விசாரணைக்குப் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைத்தனர்.

நேற்று முன்தினம் (10) இரவு வவுனியா, பறையாளங்குளம் பகுதியை சேர்ந்த பாலசுகந்தன், அனுஜா, லிங்கேஸ்வரன் மற்றும் இரண்டு சிறுவர்கள் உட்பட 6 பேர் ஒரு படகில் புறப்பட்டு, நேற்று (11) காலை சுமார் 5 மணி அளவில் தனுஷ்கோடி ஒன்றாம் மணல்திட்டில் வந்திறங்கினர்.

மேலும், தங்களை அழைத்து வந்த படகு தனுஸ்கோடி முதல்திட்டில் இறக்கிவிட்டு சென்றதாகவும், பலமணிநேரம் உணவின்றி கடும் சூறைக்காற்றுக்கு மத்தியில் உயிரை பாதுகாத்துகொண்டு, தாங்கள் அணிந்திருந்த உடைகளை காட்டி அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களிடம் காப்பாற்றுமாறு உதவி கோரிய நிலையில், இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான ரோந்து கப்பலில் எங்களை பொலிஸார் பத்திரமாக உரிய நேரத்தில் மீட்டனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலதாமதமாகி இருந்தால் நிச்சயம் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அகதியாக சென்றவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



கிராம ரீதியாக

# எரிபொருள் விநியோகம்

■ லெம்பர்ட்

மன்னார் நகர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு எரிபொருள் அட்டையின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று (11) காலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் எரிபொருள் சுமூகமான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களுக்கு 2,000 ரூபாய்க்கும், ஓட்டோக்களுக்கு 2,500 ரூபாய்க்கும், கார்களுக்கு 5,000 ரூபாய்க்கும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

சௌத்பார், பனங்கட்டுகொட்டு மேற்கு, பனங்கட்டுகொட்டு கிழக்கு, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமு னை மேற்கு, உப்புக்குளம் வடக்கு , உப்புக்குளம் தெற்கு, பெரியகடை, பெற்றா, சாவற்கட்டு, சின்னக்கடை கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி எரிபொருள் வழங்கப்படுகிறது.



## கண்களை மறைத்த ஆத்திரம்



புரட்டொப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரட்டாசி பகுதியில் இருந்து புசல்லாவ நோக்கி பயணித்த பஸ் நேற்று (11) காலை விபத்துக்குள்ளானது. இந்த விபத்தையடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பஸ்ஸை எரித்தனர்.

(எஸ். யோகா)



கடவுச்சீட்டு பெற வருவோரிடம்

# கண்டியில் மோசடி

## மூவர் சிக்கினர்

■ சேஹ்ன் செனவிரத்ன

குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் கண்டி கிளை ஊடாக, கடவுச்சீட்டுகளைப் பெற வரும் இளைஞர்களிடம் மோசடியில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒருநாள் மற்றும் சாதாரண விநியாகத்துக்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகக் கூறி 6,000 தொடக்கம் 50,000 ரூபாய் வரை மோசடியில் ஈடுபட்ட குறித்த அலுவலகத்தின் பணியாளர் ஒருவரும் மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கண்டி பொலிஸ் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருநாள் மற்றும் சாதாரண சேவையாக கடவுச்சீட்டுகள் கண்டி அலுவலகம் ஊடாக விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு கடவுச்சீட்டுகளை பெற்றுவதற்காக வருவோரிடம் முன்கூட்டியே பெற்றுத்தருவதாகக் கூறி சந்தேகநபர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைய, ஒரு நாள் சேவைக்காக 40,000 தொடக்கம் 50,000 வரை சந்தேகநபர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தெஹியத்தகண்டியிலிருந்து கடவுச்சீட்டுகளை பெறுவதற்கு வருகைத் தந்த இளைஞர் ஒருவரிடம் 25,000 ரூபாய் முற்பணம் பெற்றுக்கொண்ட போதே, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் குறித்த குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தில் கடமையாற்றும் இளைஞரும் ஓட்டோ சாரதியொருவரும் மாத்தளையைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை முதலில் இளைஞர்கள் சிலரே பிடித்துள்ள நிலையில், அவர்களை எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல், அங்கிருந்த அதிகாரிகள் விடுவிக்க நடவடிக்கை எடுத்த போது, அங்கு கூடியிருந்த ஏனைய இளைஞர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்தே சந்தேகநபர்கள் கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.





ஹட்டன் நகரில்

## டோக்கன் முறையில் பெற்றோல் விநியோகம்

■ மலைவாஞ்ஞன்

ஹட்டன் நகரில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு நேற்று (11) காலை பெற்றோல் விநியோகிக்கப்பட்ட நிலையில், தொடர்ச்சியாக வரிசைகளில் நின்றவர்களுக்கு ஹட்டன் பொலிஸார் டோக்கன்களை பெற்றுக்கொடுத்து எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

நேற்று (11) பெற்றோல் ஹட்டனுக்கு வருகிறது என கேள்வியுற்ற வாகன உரிமையாளர்கள் காலை முதல் வரிசையில் காத்திருந்த நிலையில், டோக்கன் அடிப்படையில், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவர்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 08ஆம் திகதி ஹட்டன் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மின்பிறப்பாக்கிகளுக்கும் வாகனங்களின் கொள்கலன்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட்டமையால், வரிசையில் நின்ற பல வாகனங்களுக்கு பெற்றோல் கிடைக்காமையால் திரும்பிச் சென்றன.

இதனால் நேற்றைய தினம் கொள்கலன்களுக்கோ, அல்லது மின்பிறப்பாக்கிகளுக்கோ பெற்றோல் பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது என பொலிஸார் ஒலி பெருக்கிகள் மூலம் அறிவித்தனர்.

இதற்கான நடவடிக்கைகளை இராணுவமும் பொலிஸாரும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மாவட்டத்தைச் சென்றடைந்த

## தமிழக நிவாரணப் பொருட்கள்

■ மஹேஸ் கீர்த்திரத்ன



நாட்டின் பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து தமிழக அரசாங்கத்தால் அதிகளவான நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பொருட்கள் நேற்றைய தினம் (11) மாத்தளை மாவட்டத்துக்கும் ரயில் மூலம் விநியோகிக்கப்பட்டன.

மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்னவின் ஆலோசனைக்கமைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

குறித்த நிவாரணப் பொருட்களை மாத்தளை ரயில் நிலையத்தில் வைத்து மாத்தளை மேலதிக செயலாளர் நிசாந்த கருணாதிலக, சமலா அத்தபத்து ஆகியோர் பொறுப்பேற்றதுடன், உக்குவளை தொகுதிக்கான பொருட்கள் உக்குவளை ரயில் நிலையத்தில் வைத்து, உக்குவளை பிரதேச செயலாளரால் பொறுப்பேற்கப்பட்டது.



## எதிர்ப்புப் போராட்டம்...

கொழும்பில் ஜூலை 09 ஆம் திகதி ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பைத் தெரிவித்து பதுளை மாவட்ட ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து பதுளை பஸ் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (11) முன்னெடுத்தனர்.

(எம். செல்வராஜா)



## நடுவீதியில் நடக்கும் கைதிகள்

■ பாலித ஆரியவன்ஸ

எரிபொருள் பற்றாக்குறையானது சிறைச்சாலைகள் கடமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சிலரை நீதிமன்ற நடவடிக்கைக்காக, நடை பயணமாக அழைத்துச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

இதற்கமைய, நேற்றைய (11) தினம் கைதிகள் ஐவர், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக பதுளை நகர மத்தியில் நடை பயணமாக அழைத்துச் சென்றமையை காணக் கூடியதாக இருந்தது.

## திருமணத்துக்கு வரவிருந்தோரை முற்றாக தடுத்த எரிபொருள்

■ பாலித ஆரியவன்ஸ

எரிபொருள் பிரச்சினைகள் திருமண நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்களும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பதுளை நகரிலுள்ள திருமண மண்டபத்தை, திருமணத்துக்காக முன்பதிவு செய்த நபர் ஒருவர் நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

பதுளை நகரிலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், தனது மகளின் திருமணத்தை மண்டபம் ஒன்றில் விமரிசையாக நடத்த எண்ணியிருந்தார்.

குறித்த மண்டபத்துக்கு 3 இலட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. முழு ஊருக்கும் சொல்லி திருமணத்தை செய்ய திட்டமிட்டிருந்தார்.

இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு கடந்த 9ஆம் திகதி திருமணம் நடைபெற்ற போது, அழைப்பிதழ் விடுத்த எவரும் திருமணத்துக்கு வருகை தந்திருக்கவில்லை.

எரிபொருள் பிரச்சினை காரணமாக அவர்கள் சமூகமளிக்கவில்லை என அறியமுடிக்கின்றது.

சமைத்த உணவுகள் அனைத்தும் வீணாகின. இறுதியில் மண்டபம், உணவுக்கான பணத்தை எவ்வாறு செலுத்தப்போவது என அறியாமல், குறித்த நபர் மண்டப உரிமையாளரிடம் அழுது புலம்பியுள்ளார்.

இதனையடுத்து குறித்த மண்டப உரிமையாளர், உங்களுக்கு 6 மாதம் கால அவகாசம் தருகிறோம். அதற்கிடையில் கட்டணங்களை செலுத்தி விடுங்கள் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரிவினை வந்தால்

# நாட்டை ஆள முடியாது

## இராஜாராம் தெரிவிப்பு

■ பி.கேதீஸ்

பிரிவினை வாதத்தால் நாடாள முடியாது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு எங்களது நாடு என தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், பிரிவினை வாதத்தால் இலங்கையில் ஒர் ஒழுங்கான அரசாங்கம் அமைக்க முடியவில்லை என தெரிவித்துள்ளார்.

நுவரெலியா காரியாலயத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இன்று இந்த நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைவதற்கு முதல் காரணம் இந்த அரசாங்கத்தில் ஒழுங்கான தலைமைத்தும் இல்லாததும் அனுபவமில்லாத அரசியல் செயற்பாடுகளும் ஆகும்.

அத்தோடு இந்த அரசாங்கம் பிரிவினை வாதத்திற்கு முக்கியதுவம் வழங்கி ஆட்சி நடத்தியதாலே இன்று சமூக பொருளாதாரத்தில் பின்னடைவு அடைந்து



வெளிநாடுகளில் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் 69 இலட்சம் மக்கள் வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி முறை சீர்கேட்டால் இந்த நாடு பிச்சைக்கார நாடாக மாறி என்றும் இல்லாத பஞ்சம் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் இங்கிலாந்து பிரதமர் விலகியது போல இவர்களும் விலகி, புதிய ஆட்சியாளர்களை கொண்டு வருவதன் மூலமே சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும் என்றார்.

> **பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைவதற்கு முதல் காரணம் அரசாங்கத்தில் ஒழுங்கான தலைமைத்தும் இல்லாததும் அனுபவமில்லாத அரசியல் செயற்பாடுகளும் ஆகும். அத்தோடு பிரிவினை வாதத்திற்கு முக்கியதுவம் வழங்கி ஆட்சி நடத்தியமையாகும்**

## 33,000 லீற்றர் எரிபொருள் வீதியில் வீணாகியது

■ சுரேஸ்குமார், ராமு தனராஜா

திருகோணமலை ஐ.ஓ.சி எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து ஹப்புத்தளை எரிபொருள் களஞ்சியசாலைக்கு எரிபொருளை ஏற்றிச் சென்ற பௌசர் நேற்று (11) காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பௌசர் 33,000 லீற்றர் எரிபொருளை ஏற்றிச் சென்ற போதே, ஹப்புத்தளை- பங்கெட்டிய பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதி வழுக்கியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் இதனால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விபத்துக்குள்ளான பௌசரிலிருந்து பிரதேசவாசிகள் எரிபொருளை சேகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்திரமான அரசாங்கம் இன்றேல் நிலைமை கடினமாகும்

முழுமையான வெற்றியென்பது, இலக்கின் இறுதியாகும் என்பதை சகலரும் நினைவில் கொள்ளவேண்டும். சில நேரங்களில் குறுக்கு வழியில் இலக்கை எட்டக்கூடும். நேர்வழியில் செல்வதால், கால தாமதமாகலாம். 'ஜூலை 9' போராட்டத்தின் இலக்கு இன்னும் இறுதியாக்கப்படவில்லை என்பதால், அடுத்தது என்னவென்பதே மக்களிடத்தில் இருக்கும் பெருங்கேள்வியாகும்.

'ஜூலை 9' போராட்டக்காரர்கள் கைப்பற்றியிருக்கும் மூவிடங்களும் மிகவும் முக்கியமானவை என்பதே எந்நேரத்தில் நினைவில் கொண்டிருக்கவேண்டும். இதற்கிடையே ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகையை பார்வையிடச்செல்லும் பொதுமக்களில் ஒருசிலர், அங்கிருக்கும் நினைவுச்சின்னங்களையும் விலையுயர்ந்த பொருட்களையும் உடைத்து நாசமாக்கியுள்ளனர்.

அழிவுகளின் மீதான வரிச்சுமை மக்கள் மீதே சுமத்தப்படும் என்பதில் கவனம் கொள்ளவேண்டும். இதற்கிடையே சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்கும் வகையில் தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்வதாக பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் அறிவித்துள்ளனர்.

இன்னும் சில அமைச்சர்கள் இராஜினாமா செய்துவிட்டனர். ஆனாலும், ஜனாதிபதி அந்த இராஜினாமாக்களை ஏற்கவில்லையெனவும், பிரதமர் தலைமையில் நேற்று (11) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனைவரும் பங்கேற்றிருந்தனர் என்றும் அறியமுடிகின்றது.

மறுபுறத்தில், புதிய பிரதமர், புதிய ஜனாதிபதி யார்? என்பது தொடர்பில் எதிரணியிடம் ஓர் உறுதியான தீர்மானம் நேற்று (11) வரையிலும் எட்டப்படவில்லை. இது, நாட்டை மென்மேலும் சீர்குலைத்துவிடும் என்பதை கவனத்தில் கொள்க. ஆக, ஸ்திரமான அரசாங்கமொன்றை நிறுவுவதே காலத்தின் அவசர தேவையாகும்.

நாட்டில் நிர்வாக ஆட்சியொன்று இன்றேல், சர்வதேசமும் கைகளை விரித்துவிடும். எனினும், இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன, தங்களுடைய ஆதரவுக் கரங்களை நீட்டுவதற்கு தயாராகவே இருப்பதாகவும் ஸ்திரமான ஆட்சியின் தேவையையும் வலியுறுத்தியுள்ளன.

ஆகையால், பேச்சு, சந்திப்பு என காலத்தையும் நேரத்தையும் இழுத்தடித்து கொண்டிருக்காது, ஸ்திரமான ஆட்சிக்கு செல்லவேண்டும். இல்லையேல், நாடும் மக்களும் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்னோக்கி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இன்னும் நான்கு வருடங்களுக்கு மேல் அதாவது 2027 வரையிலும் செல்லலாமென சர்வதேச நாணய நிதியமும் கோடிட்டுக் காட்டியிருந்தது. ஆகையால், காலத்தை வீணடிக்காமல் தீர்மானங்களை அவசரமாக எடுக்கவேண்டும். இரண்டு நாள்களுக்குப் பின்னர், எரிபொருளுக்கான வரிசைகள் ஆரம்பமாகியுள்ளன. போக்குவரத்து ஓரளவுக்குத் தான் வழமைக்குத் திரும்பியுள்ளது. நடந்து செல்வோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மக்களின் தேவைகளும் கூடியுள்ளன. அத்துடன், ஊழல், மோசடிகள், ஏமாற்றுவேலைகள் அதிகரித்துள்ளன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமாயின், ஆட்சி நிர்வாகம் கட்டாயமானது.

ஓர் அரசாங்கம் இல்லாத நாடென குறிப்பிட்டு கையை விரித்துவிடுவதற்கு முன்னர், ஸ்திரமான ஆட்சியை அவசரமாக நிறுவ வேண்டியது தற்போதைய மக்கள் பிரதிநிதிகளின் முன்னிருக்கும் பணியாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## மக்கள் புகட்டிய பாடம்:

# அடுத்தது என்ன?

**மொஹமட் பாதுஷா**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் எழுச்சி, இலங்கையில் நடந்தேறி இருக்கின்றது. என்றுமில்லாத பாடத்தை ஆட்சியாளர்களுக்கு, மக்கள் புகட்டி இருக்கின்றார்கள். இச்சூழலில், அடுத்ததாக என்ன நடக்கப் போகின்றது என்பதுதான், இப்போது மக்கள் மனங்களில் இருக்கின்ற பதற்றம் நிறைந்த கேள்வியாகும்.

இடைக்கால அல்லது தேசிய அரசாங்கம் எவ்வாறு அமையப் போகின்றது? யார் ஜனாதிபதியாக வருவார்? போராட்டக்காரர்களும் அரசியல் தரப்பினரும் உடன்படுவார்களா? எல்லாவற்றுக்கும் மேலாக இந்த முன்னெடுப்புகள் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு உடனடித் தீர்வைக் கொண்டுவருமா? என மேலும் பல கேள்விகளும் உள்ளன.

எது எவ்வாறிருப்பினும், மக்கள் எழுச்சியின் தன்மையும் அதனது வெற்றியும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. இந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம், இலங்கையில் ஏற்பட்டது ஓர் அரசியல் புரட்சியோ, இராணுவ அல்லது ஆயுத முரண்பாடோ அல்ல. மாறாக, ஸ்திரமற்ற, தூரநோக்கற்ற ஆட்சியாளர்களால் உருவான பொருளாதார நெருக்கடி ஆகும். இது, பாதுகாப்புத் தரப்பினர், நீதித்துறை சார்ந்தோர் உள்ளடங்கலாக, இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மட்ட மக்கள் பிரிவினரினதும் தனிப்பட்ட வாழ்வில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடிப்படை மூலதனமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், "நாங்கள்தான் சிறப்பாக செய்தோம்" என்று சொல்லிக் கொண்டே, எகத்தாளமான போக்கில் செயற்பட்டது. 'நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி உருவாகப் போகின்றது' என்று பொருளியல் நோக்கர்கள் சொன்னதையெல்லாம், ராஜபக்ஷர்கள் காதில் வாங்கவில்லை.

இதுதான் அவர்கள் செய்த முதல் தவறாகும். அரசாங்கம் அதன் பிறகாவது சுதாகரித்துக் கொண்டு, நம்பிக்கை தரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கலாம். ஆனால், தலையணையை மாற்றுவது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே தவிர, ஆக்கபூர்வமான எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சமகாலத்தில் சர்வதேச உறவுகளையும் குழப்பியடித்துக் கொண்டார்கள்.

'கோட்டாவே வீட்டுக்குப் போ' போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, இலங்கை மக்களிடையே ஏற்பட்ட மாற்றத்தை ஆட்சியாளர்கள் உய்த்தறிந்திருக்க வேண்டும். ஆனால், உலகில் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சிகள் பற்றிய எந்த அறிவும் இன்றி, மே மாதம் ஒன்பதாம் திகதி, குண்டர்களை பஸ்களில் ஏற்றி வந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஏவி விட்டார்கள். இந்த முட்டாள்தனமான திட்டம், எதிர்மறை பெறுபேறுகளையே ராஜபக்ஷவினருக்கு கொடுத்தது.

மஹிந்த இராஜினாமாச் செய்தார். மறுபுறத்தில், "நான் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பேன்" என்று கோட்டாபய அறிவித்தார். இதன்மூலம், மக்கள் போராட்டங்களை எந்தளவுக்கு அவர் குறைத்து மதிப்பிடுகின்றார் என்பது புலனாகியது.

இவ்வேளையிலேயே, ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். அவர் சில முயற்சிகளை எடுத்தார் என்பதை மறுக்க முடியாது. ஆனால், ராஜபக்ஷவினர் எதையும் எளிதில் செய்ய முடியாத ஒரு பொறிக்குள் நாட்டை சிக்கவைத்திருந்தனர்.

மே மாதத்தில் ரணில் ஒரு சிறந்த தெரிவாக நோக்கப்பட்டார். அவர் பிரதமரான பிறகு பொருளாதாரக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட முன்னேற்றம், மக்களின் வாழ்வில் கொஞ்சமும் கூட ஏற்படவில்லை என்பதே, அதன் பின்னரான மக்கள் எழுச்சிக்கு வித்திட்டது.

சர்வதேச நாடுகளுடனான உறவுகள், ஐ.எம்.எப் உடனான பேச்சுகள், இடைக்கால பட்ஜெட் மற்றும் 'கப்பல்' கதைகளைக் கூறிக் கொண்டு காலத்தை இழுத்தடித்து விடலாம் என்று ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். இந்த அணுகுமுறை, மக்கள் மீதான நெருக்கடிகள் தீவிரமடைய வழிவகுத்தது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது, சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சியின் அரசியல் பலவீனமும் இந்த நிலைக்கு ஏதோ ஒருவிதத்தில் காரணியாகியுள்ளது. விமர்சனங்களை மட்டும் செய்து கொண்டு, யதார்த்தங்களுக்கு அப்பால் நின்று அரசியல் செய்ய முற்படுகின்ற மக்கள் விடுதலை முன்னணி இதர தமிழ், முஸ்லிம் கட்சிகளும் இந்தச் சீரழிவுக்கு மறைமுக காரணிகளாகி இருக்கின்றன.

ரணில் தொடர்பாக மக்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மாறாக, நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. மே 9 இற்குப் பிறகு வரிசைகளும் வாழ்வாதார நெருக்கடிகளும் பன்மடங்காக அதிகரித்தன.

இப்போது நாட்டில் பிரகடனப்படுத்தாத முடக்க நிலையும் வறுமையும் ஏற்படத் தொடங்கியிருக்கின்றது. இப்படியே போனால், நாம் நாட்டில் வாழ முடியாத நிலை ஏற்படும் என்ற உணர்வு ஒவ்வொரு பொது மகனுக்கும் ஏற்பட்டு விட்டது.

இதுவே, மக்கள் போராட்டம் இரண்டாம் கட்டமாக பேரெழுச்சி கொள்வதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில், முன்னதாக மே 9 மஹிந்தவும், ஜூன் 9 பசிலும் பதவி விலகியிருக்க, கோட்டபாயவையும் ரணிலையும் வீட்டுக்கு அனுப்பும் தினமாக ஜூலை 9 ஆம் திகதி நாட்குறிக்கப்பட்டது.

நாட்டின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் மக்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர். ஊரடங்கை பிறப்பித்து, பின்னர் நீக்கியதன் மூலம் இன்னுமொரு முட்டாள்தனத்தை ஆட்சியாளர்கள் செய்தனர். இந்தத் தடங்கல்களை எல்லாம் மீறி 9ஆம் திகதி இலட்சக்கணக்கான மக்கள் கொழும்பை முற்றுகையிட்டனர்.

கண்ணீர்ப் புகைக் குண்டுகள், குண்டாந்தடி, வான்நோக்கிய துப்பாக்கிப் பிரயோகம், வீதித் தடைகள் என எல்லாவற்றையும் உடைத்துக் கொண்டு ஜனாதிபதி மாளிகைக்குள்ளும் பின்னர் ஜனாதிபதி அலுவலகத்துக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைந்தனர்.

எவ்வாறிருப்பினும். இந்த முன்னெடுப்பு ஒரே நாளில், பெரிய இரத்தம் சிந்தல் இல்லாமல், வெற்றிபெற்றமைக்கு பிரதான காரணம் பௌத்த தேரர்கள் வழங்கிய ஆதரவாகும். அடுத்தது, நீதித் துறை பக்கபலமாகச் செயற்பட்டதாகும். மிக முக்கியமாக, இதில் கலந்து கொண்ட ஆண்கள், பெண்களின் அர்ப்பணிப்பும் விடாமுயற்சியுமாகும்.

ஆயினும், ஜனாதிபதி மாளிகையை ஆக்கிரமிப்பது வேறு; ஆனால், அதன் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் நையாண்டித்தனமான வீடியோ, புகைப்படங்களை வெளியிடுவது ஒருவித பக்குவமற்ற தன்மையாகவே தோன்றுகின்றது.

அதேபோன்று, ரோயல் கல்லூரிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதும் அதிக புத்தகங்கள் இருந்ததாக நம்பப்படுவதுமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீவைக்கப்பட்ட சம்பவத்தையும் ஏற்க முடியாது. பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்த பகுதியில், சில செய்தியாளர்கள் தாக்கப்பட்டு, மின்துண்டிக்கப்பட்ட நிலையில் இது நடந்திருக்கின்றது.

'தாங்கள் இதனை செய்யவில்லை' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகின்றனர். ஆனால், ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவோர் எல்லோருமே பக்குவமானவர்கள் இல்லை. அரசியல் தரப்பினர் கூட இதனைச் செய்தும் இருக்கலாம். எல்லாவற்றையும் கடந்து, இப்போது ஒரு தீர்க்கமான கட்டத்துக்கு வந்துள்ளோம். 13ஆம் திகதி பதவியை இராஜினாமாச் செய்வதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஏற்கெனவே பதவி விலகுவதற்கான தன்னார்வத்தை பிரதமர் வெளியிட்டு விட்டார்.

முன்னதாக, அவசரமாகக் கூடிய கட்சித் தலைவர்கள், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் அதுவரை ஒரு மாத காலத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பதில் ஜனாதிபதியாக நியமிப்பதற்கும் தீர்மானித்துள்ளனர். வேறு மாற்று திட்டங்கள் பற்றியும் பேசப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் முன்மொழிவுகளும் சர்வகட்சித் தலைவர்களின் சில தீர்மானங்களும் ஒத்துப் போகின்றன. ஆனால் சில விடயங்களில் முரண்பட்ட நிலைப்பாடுகளை காண முடிகின்றது. மேலும் சில முன்மொழிவுகள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக உள்ளன. இது மிகச் சிக்கலான ஒரு நிலைமையாகும்.

உண்மையில், இந்த மக்கள் எழுச்சி இன்னும் முழுமையாக வெற்றியடையவில்லை. ஸ்திரமான ஆட்சிக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டு, மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்போதுதான் அந்த வெற்றி அர்த்தபுஷ்டியாக இருக்கும். எனவே, அதுவரை உத்தேச பதில் ஜனாதிபதி, கட்சித் தலைவர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் என அனைத்து தரப்பினரும் மக்கள் நலன்சார்ந்த ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான திசையில் பக்குவமாக முன்நகர வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் எல்லாம், வீணாகிப் போகும்.



## வாழ்வியல் தரிசனம்

வாழ்க்கையில் எழும் போராட்டங்கள், சோதனைகளின் மத்தியில் வாழ்வு சங்கிலித் தொடர்பு போலாகின்றது. இவைகள் எல்லாமே, எமக்கான அனுபவ முத்திரைகளாகி விடுவது இயல்பானது.

ஆனால், துன்பங்களுடன் வரும் சவால்கள் மட்டும் அனுபவங்கள் அல்ல; இன்பங்கள் ஊடாகவும் அனுபவங்கள் ஏற்படுகின்றன. உல்லாச வாழ்க்கையால் பலருக்கு எதிர்காலம் வீணாகி விடுவதுண்டு. மேலும், சதா காலமும் எல்லோரும் அதிர்ஷ்டம் வாய்ப்பாகிய நிலையுடன் வாழ்ந்திட முடியாது.

புத்திசாலிகள் வரும் செல்வங்களைப் பொறுப்புடன் பேணுவார்கள். காசைக் கண்டதும் தன்னிலை மறப்பவர்களே அதிகம். இருக்கிற வரவுகளைப் பெருக்குவதே, அழகான குடும்பவாழ்வின் வெற்றியாகும். ஏமாற்றுக்காரர்களுடன் தோழமை கொள்வதும் மதுபானம், போதைவஸ்துகள், கெட்ட சகவாசங்கள் எல்லாமே ஒருவரை நொடித்து, அழித்துவிடுகின்றன. இவை மீட்சி இல்லாத பயணங்களாகும்.

கெட்ட விதத்தில் பாவத்தைச் சேகரிப்பவர்கள், மீளமுடியாது திணறுகின்றார்கள். அநேகருக்கு அனுபவங்களை உணருவது எப்படி எனத் தெரியாது வாழுகின்றார்கள். நல்லது எது, கெட்டது எனத் தெரியாவிட்டால் துன்பம்தான்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆசிரியர்களை நியமியுங்கள்

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலைகளின் உயர்தரப் பிரிவுகளில் கணித, விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்குமாறு பெற்றோர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் காணப்படுகின்ற 1ஏபி, 1சி பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக காணப்படுகின்றது. குறிப்பாக கணித, விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் மாணவர்களுக்கான ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களின் பற்றாக்குறை தொடர்பாக, பெற்றோர்களால் கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை எனவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் கடந்த காலங்களில் ஆராயப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் பணிக்கு வரவில்லை.

துணுக்காய் வலயத்தில் காணப்படுகின்ற ஆசிரியர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வட மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கை ஆகும்.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை

அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொதுக்கூட்டத்தில்

# அதிரடி முடிவு

**எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொது செயலாளர்: கட்சியில் இருந்து ஓபிஎஸ் நீக்கம்**





அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பொதுக்குழுக்கூட்டத்தை நடத்த சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து சென்னை வானகரத்தில் நடந்துவரும் அந்தக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு சிறப்புத் தீர்மானம் அறிமுகம் செய்யப்பட்டு ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நேற்று (11) நீக்கப்பட்டனர்.

இதுவரை ஓ.பி.எஸ். வகித்துவந்த பொருளாளர் பொறுப்புக்கு திண்டுக்கல் சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் காலையில் கைப்பற்றிய சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர். அந்தப் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அங்கே பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கொல்கத்தாவில்

## இரு நாள்கள் தனியாக மனம் விட்டு பேசுங்கள்

திருமணமான சில மாதங்களிலேயே இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அது ஒரு கட்டத்தில் மோசமடைய இருவரும் ஒரு வருடத்துக்குள்ளே பிரிந்துள்ளனர். சுமார் ஏழு ஆண்டுகள் கழித்து மனைவியின் முறைப்பாடு காரணமாக இந்த வழக்கு, விவாகரத்து என்பது வரை தற்போது நீண்டுள்ளது.

பெண்ணின் கணவர் நகையை வைத்துக்கொண்டு தர மாட்டேன் எனக் கூறியதாக, கணவர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்கு தொடுத்துள்ளார் மனைவி. இந்நிலையில், கணவர் பிணை கேட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

அத்துடன் இருவரும் விவாகரத்து செய்யும் முடிவெடுத்துள்ளனர். இந்த வழக்கை கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கௌசிக் சந்தா விசாரித்துள்ளார். பின்னர் தம்பதி இருவரையும் தனது சேம்பருக்கு அழைத்த நீதிபதி சந்தா, இருவரும் படித்து நல்ல நிலையில் உள்ளீர்கள். இப்படி இருந்து சிறு சிறு விவகாரங்களுக்காக இவ்வாறு முடிவெடுப்பது உகந்தது அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இருவரும் நல்ல சூழலில் அமர்ந்து மனம் விட்டு பேசுங்கள் என அறிவுரை வழங்கி இரு நாள்களுக்குப் பின் வரச் சொல்லியுள்ளார். இதையடுத்து கொல்கத்தாவில் உள்ள இக்கோ பார்க் என்ற இடத்தில் இருவரும் தங்கி பேசவுள்ளனர். வழக்கை நீதிபதி சந்தா கையாண்ட விதம் தனி கவனத்தை பெற்றுள்ளது.

மும்பை

## பல பக்கங்களை கிழித்தவர் சிக்கினார்

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த பயணி ஒருவரை அதிகாரிகள் வழக்கம் போல சோதனை செய்துள்ளனர். அப்போது அந்த நபரின் கடவுச்சீட்டில் சில பக்கங்கள் காணமால் போனதை அவர்கள் கண்டறிந்தனர்.

கடைசியாக பயணம் சென்று வந்த பக்கங்கள் என்பதை அறிந்த அவர்கள் அந்த நபரை பிடித்து விசாரித்துள்ளனர். அப்போதுதான் அந்நபர் வேண்டுமென்றே கடவுச்சீட்டி இருந்து பக்கங்களை கிழித்திருப்பதை அதிகாரிகள் தெரிந்து கொண்டனர்.

குற்றத்திற்குள்ளான அந்த நபருக்கு திருமணத்தை மீறிய உறவு இருந்துள்ளது. அதனால், கள்ளக்காதலியுடன் அவர் மாலத்தீவு சென்று வந்துள்ளார். இந்த விஷயம் மனைவிக்கு தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவே உஷாராக இருக்க கடவுச்சீட்டிலிருந்து பயணத் தகவல்கள் இருந்த பக்கங்களை கிழித்து நீக்கியுள்ளார்.

கடவுச்சீட்டில் பக்கங்களை கிழிப்பது குற்றம் என்ற நிலையில் அந்த நபரை பொலிஸார், மோசடி மற்றும் ஏமாற்று வழக்குகளில் கைது செய்துள்ளனர். கைதான நபர் தனக்கு இந்தியாவின் வேறு இடத்திற்கு வேலை நிமித்தமாக செல்கிறேன் என மனைவியிடம் தெரிவித்துள்ளார். மனைவியிடம் பொய் சொல்லிவிட்டு இவர் மாலத்தீவு சென்ற நிலையில், செல்போன் மூலம் இவரை மனைவி தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை.

சென்னை

## செல்லாது செல்லாது



இன்று (நேற்று) நடைபெற்ற அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க.) பொதுக்குழு நிச்சயமாக செல்லாது. தனிப்பட்ட சுயநலத்தால் கூட்டப்பட்ட பொதுக்குழு. எடபாடி பழனிசாமி பொதுச்செயலாளரானது கேள்விக்குறியாக இருக்கும் பொழுது அவர் ஓ.பன்னீர் செல்வத்தை நீக்கியது எப்படி செல்லுமென சசிகலா கேள்வியெழுப்பியுள்ளார்.

சென்னை

அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு

## சீல் வைப்பு



சென்னை - ராயப்பேட்டையில் உள்ள அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க.,) தலைமை அலுவலகத்திற்கு வருவாய்த் துறை அதிகாரிகள் சீல் வைத்தனர்.

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் நேற்று (11) காலை நடைபெற்றது. ஓ.பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்) பொதுக்குழு கூட்டத்திற்குச் செல்லாமல் தலைமைக் கழகத்திற்குப் சென்றார்.

ஓபிஎஸ் வாகனம் ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் வந்தபோது எடப்பாடி பழனிசாமி (ஈபிஎஸ்) ஆதரவாளர்கள் அவரது வாகனத்தை முன்னேறவிடாமல் கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர். இதனால் ஓபிஎஸ், ஈபிஎஸ் ஆதரவாளர்களிடையே கடுமையான மோதல் ஏற்பட்டது.

இந்நிலையில், ஓபிஎஸ் ஆதரவாளர்கள் தலைமைக் கழக அலுவலகத்தின் பூட்டை உடைத்து ஓபிஎஸ் உள்ளே வர வழி செய்தனர். ஓபிஎஸ் ஆதரவாளர்கள் தலைமைக் கழகத்தை சுற்றிவைக்கப்பட்டிருந்த ஈபிஎஸ் பேனர்களை கிழித்தெறிந்தனர். தலைமைக் கழகத்தின் அனைத்து கதவுகளையும் அடித்து நொறுக்கினர். இதன் காரணமாக அங்கு பரபரப்பு நிலவியது. இந்நிலையில், அங்கு விரைந்த வருவாய்த் துறை அதிகாரிகள் அ.தி.மு.க தலைமை அலுவலகத்திற்கு சீல் வைத்தனர்.

அசாம்


## விழிப்புணர்வு நாடகம் நடத்திய நபருக்கு வழக்கு


அசாம் மாநிலத்தில் எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து கடவுள் வேடம் அணிந்து விழிப்புணர்வு நாடகம் நடத்திய நபருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நகோன் மாவட்டத்தை சேர்ந்த இளைஞரும், இளம்பெண்ணும் சிவன், பார்வதி வேடம் அணிந்து ராயல் என்பீல்டில் பயணித்தபோது சாலையில் வாகனம் பழுதடைந்து நடு வழியில் நிற்பதை போலவும், அதன்பிறகு சிவனுடன் பார்வதி வாக்குவாதத்தில் ஈடுபடுவது போன்றும் நாடகம் நடத்தியுள்ளனர்.

அப்போது, சிவன் வேடம் அணிந்த நபர் எரிபொருள் விலையேற்றம் குறித்தும், வேலையில்லா திண்டாட்டத்தின் பாதிப்பு குறித்தும் பேசி பார்வதி தேவியை சமாதானப்படுத்த முயன்றார்.

இந்நிலையில், இந்து மத உணர்வை புண்படுத்தும் விதமாக நாடகம் நடத்தியதாக இந்து அமைப்பினர் காவல்நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதனடிப்படையில் சிவன் வேடம் அணிந்து நாடகம் நடத்திய நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.





# பாடும் கீர்த்தி

விக்ரம் பிரபு நடித்த 'இது என்ன மாயம்' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான கீர்த்தி சுரேஷ், அதன் பிறகு 'ரஜினி முருகன்', 'தொடரி', 'சீமராஜா', 'சண்டக்கோழி 2', 'சாமி 2', 'அண்ணாத்தை' உள்பட பல திரைப்படங்களில் நடித்தார்.


'நடிகையர் திலகம்' என்ற படத்தில் சிறப்பாக நடித்ததற்காக தேசிய விருதும் பெற்றார். தற்போது உதயநிதி ஸ்டாலினுடன் 'மாமன்னன்' உள்பட 3 படங்களில் நடித்து வருகிறார்.


இந்த நிலையில் நடிகை கீர்த்தி சுரேஷ் சினிமா நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போது அதில் 'ரெமோ' திரைப்படத்தில் இடம் பெற்ற பாடலை பாடிய வீடியோ தற்போது இணையதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை பார்த்த அவரது ரசிகர்கள், கீர்த்தி சுரேஷ் இவ்வளவு அழகாக பாடுவாரா? என ஆச்சரியத்தில் உள்ளனர்.






# தமன்னா நெகிழ்ச்சி







ஏழு வருடங்களுக்கு முன் மக்கள் என் பெயரை மாற்றி விட்டார்கள் என்றும் என்னை புதிய பெயரில் அவர்கள் அழைக்கும் போது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது என்றும் நடிகை தமன்னா தனது சமூக வலைத்தளத்தில் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

பிரம்மாண்ட இயக்குநர் எஸ்எஸ் ராஜமௌலி இயக்கத்தில், பிரபாஸ், அனுஷ்கா நடித்த திரைப்படம் 'பாகுபலி'. 'பாகுபலி' திரைப்படம் கடந்த 2015ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் திகதி வெளியானதுடன், தற்போது 7 வருடங்கள் ஆகிவிட்டது.

இந்தத் திரைப்படத்தில் அவந்திகா என்ற கேரக்டரில் தமன்னா நடித்து இருந்தார். இந்த படத்தின் ரிலீஸுக்கு பின்னர் மக்கள் தமன்னாவை 'அவந்திகா' என்றே சமூக வலைத்தளங்களில் அழைத்து வருவது தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து தமன்னா தனது டுவிட்டர் பக்கத்தில் "ஏழு வருடங்களுக்கு பிறகும் என்னை மக்கள் அவந்திகா என்று அழைப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று கூறினார்.

மேலும் "உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு திரைப்படத்தில் நானும் நடித்திருக்கிறேன் என்பது எனக்கு மிகப்பெரிய பெருமை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலவசமாக நடிக்கும் விஜய்



தளபதி விஜய் ஒரு திரைப்படத்தில் ஒரு ரூபாய் கூட சம்பளம் வாங்காமல் ஒரு சிறிய கேரக்டரில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஷாருக்கான், நயன்தாரா நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'ஜவான்'. இந்த திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் இந்த படத்தில் ஒரு சிறிய கேரக்டரில் விஜய் நடிக்க இருப்பதாகவும் அந்த கேரக்டரில் நடிக்க விஜய் ஒரே ஒருநாள் மட்டும் கால்ஷீட் கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்த காட்சியில் நடிப்பதற்கு ஒரு ரூபாய் கூட விஜய் சம்பளம் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் ஷாருக்கான் மற்றும் அட்லி உடனான நட்பின் அடிப்படையிலேயே நடிக்கவுள்ளதாக தெரிகிறது.

ஏற்கெனவே அக்ஷய் குமார் நடித்த 'ரவுடி ரத்தோர்' என்ற திரைப்படத்தை பிரபுதேவா இயக்கிய போது அந்தத் திரைப்படத்திலும் ஒரு பாடல் காட்சியில் விஜய் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# விஜய் – அஜித் டுபாயில் ரகசிய சந்திப்பு



தமிழ் திரை உலகின் மாஸ் நடிகர்களான விஜய், அஜித் ஆகிய இருவரது திரைப்படங்கள் வெளியாகும்போது அவரவர் ரசிகர்களுக்கு பெரும் திருவிழாவாக இருக்கும்.

ஆனால் அதே நேரத்தில் விஜய், அஜித் ஆகிய இருவரும் நட்புடன் தான் இருக்கிறார்கள் என்றும், சென்னையில் அவர்களை அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள் என்றும் ஏற்கெனவே செய்தி வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் தற்போது பிரபல இசையமைப்பாளரும் இயக்குநர் வெங்கட் பிரபுவின் தந்தையுமான கங்கை அமரன் அண்மையில் அளித்த பேட்டியில், "அஜித், விஜய் ஆகிய இருவரும் அவ்வப்போது குடும்பத்துடன் டுபாயில் சந்தித்து கொள்வார்கள். அந்தச் சந்திப்பின்போது சிலநேரம் எங்களுடைய குடும்பமும் இருந்திருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தகவல் அஜித், விஜய் ரசிகர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்துள்ளது. மேலும் விஜய், அஜித் ஆகிய இருவரும் இணைந்து நடிக்கும் திரைப்படத்தின் கதையை வெங்கட்பிரபு எழுதி வருவதாகவும் விரைவில் பிரமாண்டமான அறிவிப்பு வெளியாகும் என்றும் கங்கை அமரன் தெரிவித்திருந்தார்.



## இலங்கை எதிர் அவுஸ்திரேலியா:
# தொடர் சமநிலையானது

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரானது சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியில் இலங்கை வென்றிருந்த நிலையில், காலியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டில் இலங்கை வென்றயைத் தொடர்ந்தே 1-1 என தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

நேற்றைய நான்காம் நாளை தமது முதலாவது 6 விக்கெட்டுகளை இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, தினேஷ் சந்திமாலின் ஆட்டமிழக்காத 206 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 554 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மிற்செல் ஸ்டார்க் 4, மிற்செல் ஸ்வப்ஸன் 3, நேதன் லையன் 2, பற் கமின்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, பிரபாத் ஜெயசூரிய, ரமேஷ் மெண்டிஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜெயசூரிய 6, மெண்டிஸ், மகேஷ் தீக்‌ஷன ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலியா: 364/10 (துடுப்பாட்டம்: ஸ்டீவ் ஸ்மித் ஆ.இ 145, மர்னுஸ் லபுஷைன் 104 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 6/118, கசுன் ராஜித 2/70, மகேஷ் தீக்‌ஷன 1/48, ரமேஷ் மெண்டிஸ் 1/117)

இலங்கை: 554/10 (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் ஆ.இ 206, திமுத் கருணாரத்ன 86, குசல் மெண்டிஸ் 85, கமிந்து மெண்டிஸ் 61, அஞ்சலோ மத்தியூஸ் 52 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 4/89, மிற்செல் ஸ்வப்ஸன் 3/103, நேதன் லையன் 2/194, பற் கமின்ஸ் 1/95)

அவுஸ்திரேலியா: 151/10 (பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 6/59, மகேஷ் தீக்‌ஷன 2/28, ரமேஷ் மெண்டிஸ் 2/47)

போட்டியின் நாயகன்: பிரபாத் ஜெயசூரிய

தொடரின் நாயகன்: தினேஷ் சந்திமால்



## டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:
# திரித்துவக் கல்லூரியை வென்ற றோயல்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், றோயல் விளையாட்டு வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற தமது பரம வைரிகளான றோயல் கல்லூரியுடனான போட்டியில் யசிரு ஆரியவன்சவின் இறுதி நிமிட ட்ரையுடன் திருத்துவக் கல்லூரி 21-20 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

திரித்துவக் கல்லூரி சார்பாக, அனுஹாஸ் கொடித்துவக்கு, யசிரு ஆரியவன்ஸ ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையை பெற்றதோடு, இதிலொன்றை கொவிட விக்கிரமசிங்க கொன்வேர்ஷனாக மாற்றியிருந்தார். தவிர, பெனால்டி மூலமும் மூன்று புள்ளிகளை விக்கிரமசிங்க பெற்றிருந்தார். றோயல் சார்பாக, ரஹில் விஜேசேகர, ஹன்சக ஹிக்கொட ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையைப் பெற்றதோடு, அவ்விரண்டு ட்ரைகளையும் நபில் யஹியா கொன்வேர்ஷனாக மாற்றியதோடு பெனால்டி மூலம் இரண்டு புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

## விம்பிள்டன் டென்னிஸ் தொடர்:
# சம்பியனான ஜோக்கோவிச்

பிரித்தானியாவில் நடைபெற்றுவந்த விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், உலகின் ஏழாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் சம்பியனாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவின் நிக் கிர்ரியோஸுடனான இறுதிப் போட்டியில் முதலாவது செட்டை 4-6 என இழந்தபோதும், 6-3, 6-4, 7-6 (7-3) என அடுத்த மூன்று செட்களையும் வென்று ஏழாவது முறையாக சேர்பியாவின் ஜோக்கோவிச் சம்பியனானார்.

அந்தவகையில், 21ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை ஜோக்கோவிச் வென்றுள்ளார்.






## மாகாண மட்ட போட்டிக்கு
# சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்திலிருந்து எண்மர்

நூருல் ஹுதா உமர்

கல்முனை வலய மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில், சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய போட்டியாளர்கள் எண்மர் வலய மட்டத்தில் வெற்றிபெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் மூன்று முதலாமிடங்களையும், ஐந்து இரண்டாமிடங்களையும், மூன்று மூன்றாமிடங்களையும் இப்போட்டியாளர்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சூரியகுமாரின் அபார சதத்துக்கு மத்தியிலும்
# இந்தியாவை வென்றது இங்கிலாந்து

இந்தியாவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் முதலிரண்டு போட்டிகளையும் தோற்று தொடரை ஏற்கெனவே இழந்த இங்கிலாந்து, நொட்டிங்ஹாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 215/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் மலான் 77 (39), லியாம் லிவிங்ஸ்டோன் ஆ.இ 42 (29), ஜேஸன் றோய் 27 (26), ஹரி ப்றூக் 19 (09), ஜொஸ் பட்லர் 18 (09), கிறிஸ் ஜோர்டான் 11 (03) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி பிஷ்னோய் 2/30 [4], ஹர்ஷால் பட்டேல் 2/35 [4])

இந்தியா: 198/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 117 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: றீஸ் டொப்லி 3/22 [4], கிறிஸ் ஜோர்டான் 2/37 [4], டேவிட் வில்லி 2/40 [4], றிச்சர்ட் கிளீஸன் 1/31 [4])

போட்டியின் நாயகன்: றீஸ் டொப்லி

தொடரின் நாயகன்: புவ்னேஷ்வர் குமார்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ஓவலில் நாளை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.



அமெரிக்கா

# கருத்தடைக்கு கடும் எதிர்ப்பு

## அமெரிக்காவில் வலுக்கும் போராட்டம்

அமெரிக்காவில் 1973 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கருக்கலைப்பு பெண்களின் தனிப்பட்ட உரிமை, என்று தீர்ப்பளித்தது.

இதேபோன்று 1992ஆம் ஆண்டு இதே வழக்கில் ஒரு பெண் 22 இலிருந்து 24 வாரங்களில் கர்ப்பத்தை கலைத்துக்கொள்ள சட்டபூர்வமாக அனுமதி உண்டு என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில் 15 வாரங்கள் ஆனப்பின் கருவை கலைக்க தடை விதித்து மிசிசிப்பி மாகாணம் சட்டம் கொண்டு வந்தது.




இச்சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வழக்கு தொடரப்பட்டது.

இவ் வழக்கிற்க்கான தீர்ப்பு கடந்த 24ஆம் திகதி வழங்கப்பட்டது.

அதில் பெண்களின் கருக்கலைப்பு தனிப்பட்ட சட்டம் என்ற உரிமை அதிரடியாக இரத்து செய்யப்பட்டது.

இதனால் 50 வருடங்களாக இருந்த உரிமை சட்டம் நீக்கப்படுவதா? என்று கொந்தளித்த பெண்கள் அதனை எதிர்த்து அமெரிக்காவின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வோஷிங்டனில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து கருக்கலைப்பு தடை சட்டத்தை எதிர்த்து பேரணியொன்றை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

சீனா

# மக்கள் வங்கிக்கு எதிராக சீனர்கள் போராட்டம்



சீனாவின் மக்கள் வங்கியில் வைப்புத் தொகையை முடக்கியமை தொடர்பாக நடந்த போராட்டத்தில் பாதுகாப்பு படையினருக்கும், பொது மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

சீனாவில் கிராமப்புற அடிப்படை வங்கிகளில் பொது மக்கள் சேமித்த கோடிக்கணக்கான ரூபாய் வைப்புத் தொகை பணத்தை வங்கி நிர்வாகம் முடக்கியதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பணத்தை திருப்பித் தரக்கோரி வங்கியின் முன் ஏராளமானோர் திரண்டு போராட்டம் நடத்தியதாகவும், இதன் போது போராட்டத்தை கலைக்க பாதுகாப்பு வீரர்கள் முற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு வீரர்கள் மீது தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்டவற்றை எறிந்து மக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர் எனவும் இதனால் இரு தரப்பினர் இடையேயும் மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்



# மரணித்த பிரதமர் அபேவின் கட்சி வெற்றி

ஜப்பான் பாராளுமன்ற மேலவைத் தேர்தலுக்கான பிரசாரத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் 'லிபரல் ஜனநாயக கட்சி' பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு இரு நாள்களுக்கு முன்னர், முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் மொத்தமுள்ள 248 இடங்களில் ஷின்சோ அபேயின் லிபரல் ஜனநாயக கட்சி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றியுள்ளது. அத்துடன் பல்வேறு சட்ட திருத்தங்களை பிரதமர் கிஷிடோ தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனா

# மாதவிடாயுடன் தவித்த இளைஞன்



சீனாவை சேர்ந்த 33 வயதான இளைஞர் ஒருவருக்கு வயிற்று பகுதியில் வலி ஏற்பட்டு வந்துள்ளது. மேலும் அவரது சிறுநீரில் இரத்தமும் வந்துள்ளது.

'சென் லீ' என்ற புனை பெயரால் அறியப்படும் அந்த நபருக்கு வயது வந்தபோது, சீரற்ற சிறுநீர் வெளியேற்றம் இருந்துள்ளது. இதற்காக அதனை சரி செய்யும் அறுவை சிகிச்சையை செய்து கொண்டார்.

அதன்பின்னர், 20 ஆண்டுகளாகவே அவருக்கு சில அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இதனால், 'அப்பெண்டிஸ்' எனப்படும் குடல்வால் அறுவை சிகிச்சையையும் அவர் செய்து கொண்டார்.

இந்நிலையில், சென்னுக்கு பெண்களுக்கான பாலியல் குரோமோசோம்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அவர் மருத்துவ பரிசோதனை செய்ததில், கர்ப்பப்பை மற்றும் பெண்களுக்கான சுரப்பிகள் உள்ளிட்ட பெண்களுக்கான இனப்பெருக்க உள் உறுப்புகள் அவருக்கு இருப்பது தெரிய வந்தது.

சென்னுக்கு ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்புகள் இருந்து வந்துள்ளன. 20 ஆண்டுகளாக அவருக்கு மாதவிடாய் ஏற்பட்டு உள்ளது.

இதனாலேயே அவருக்கு சிறுநீரில் இரத்தம் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சென்னுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இதன்பின்னர், சென் மற்ற ஆண்களை போல் வாழலாம் என அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் லுவோ ஜிபிங் கூறியுள்ளார்.

எனினும், விந்தணு உற்பத்தி செய்ய முடியாத சூழலில் அவரால் இனப்பெருக்கம் செய்ய முடியாது என்றும் லுவோ கூறியுள்ளார்.

உலக மக்கள் தொகையில் 0.05 முதல் 1.7 சதவீதத்தினர் இதுபோன்று ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்புகளுடன் உள்ளனர் என ஐ.நா அமைப்பு தெரிவித்து உள்ளது.



சீனா

# சிவப்பு எச்சரிக்கை

சீனாவின் ஷாங்காய் நகரில் கடந்த சில நாள்களாக வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், அங்குள்ள வானிலை ஆய்வு மையம், மாகாணத்தின் சில பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் கடுமையான வெப்பத்தை சமாளிக்கவும், வெப்ப தாக்குதலை தவிர்க்கவும், நண்பகல் நேரங்களில் வெளியில் நடமாடுவதை தவிர்க்குமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பகல் நேரங்களில் வெளியில் வேலை செய்வதைத் தவிர்க்கவும், வெளியில் வேலைசெய்ய வேண்டிய நிலையில் உள்ள தொழிலாளர்கள் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

சிலி

# பனிப் பொழிவில் சிக்கிய 250 கார்கள்

தென் அமெரிக்க நாடான சிலியின் மலைப் பகுதியில் ஏற்பட்ட திடீர் பனிப் பொழிவில் சிக்கி, 250 கார் உள்ளிட்ட வாகனங்கள் நகர முடியாது காணப்பட்டன.

இந்நிலையில் பனிப் பொழிவில் சிக்கித் தவித்த வாகன ஓட்டிகளை இராணுவ வீரர்கள் மீட்டு முகாம்களில் சேர்த்துள்ளனர்.

மேலும் வீதிகளில் கொட்டிக் கிடக்கும் பனியை அகற்றி போக்குவரத்தை சீர் செய்யும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 12 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.